# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119  08-10-1993
இதழ்: 20  விலை ரூபா 5-00


Periodicals Division
Library


**நற்சான்றுக் கடிதம்**

'' நீங்களே எங்களுடைய நற்சான்றுக் கடிதம்; அது எங்கள் உள்ளங்களில் பொறிக்கப்பட்டுள்ளது; இதை எல்லா மனிதரும் பார்க்கவும் படிக்கவும் கூடும். எங்கள் ஊழியத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே என்பது வெளிப்படை. எழுதினது மையினாலன்று, உயிருள்ள கடவுளின் ஆவியினாலே; கற்பலகையில் அன்று உங்கள் உள்ளங்களாகிய உயிர்ப்பலகைகளிலேயே எழுதப்பட்டது.''

(2 கொரி. 3 : 2 - 3)

**உள்ளே**


| | பக்கம் |
|---|---|
| ● ம. மே. மா. சிறப்பு ஞாயிறு | 2 |
| ● குருக்கள் – துறவியர் — திருத்தந்தை பேட்டி | 3 |
| ● வேதாகமம் | 3 |
| ● வாசகர் கருத்து | 5 |
| ● புனித பத்திரிசியார் கல்லூரி அனுமதி | 5 |


✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

## "புதுப்புனல்" வார நிகழ்வுகளில்

# ஆர்வத்துடனும் புத்துணர்வுடனும் மக்கள் பங்கேற்கின்றனர்

**யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வழிகாட்டலின் கீழ், யாழ். மறைமாவட்ட பிரதமகுரு அருள்திரு S. J. இம்மானுவேல் அடிகளாரின் உயிரூட்டல் ஊடாக, யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டிற்கு ஆயத்தமாக பங்குமட்டங்களில் நடைபெறும் "புதுப்புனல்" எழுச்சி வார நிகழ்வுகள் சகல யாழ். மறைக் கோட்ட பங்குகளிலும் பெரும் எதிர்பார்ப்புகள் மத்தியில் பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும், ஆர்வத்துடனும் கடந்த திங்கட் கிழமை 4.10.93 அன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

கடந்த மார்ச் 25 ஆம் திகதி நடைபெற்ற யாழ் மறைமாவட்டக் குருக்கள் பேரவை ("Senate of Priests") இன் பரிந்துரைப்படி, அருட்திரு J. நிக்கலஸ் அடிகளாரை செயலராகக் கொண்ட செயற்குழு பல தடவைகளில் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அடங்கிய பல துறை சார்ந்த 10 குழுக்களுக்கும், வெவ்வேறு நிலையினருக்கும் கருத்துரைகளை ஏற்பாடு செய்து கலந்தாலோசித்து, மாநாட்டின் முதற்கட்டமாக இப்புதுப்புனல் வாரத்தை ஒழுங்கு செய்துள்ளது. 10 குழுக்களிலுமிருந்து தேர்ந்தெடுத்து பயிற்றுவிக்கப்பட்ட 149 ஊக்குவிப்பாளர், 10 குழுக்களினதும் இணைப்பாளரின் தலைமையில் எல்லாப் பங்குகளையும் தரிசித்து மக்களுக்கு ''தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபையை நோக்கி'' எனும் மையக் கருத்தை விளக்கி மக்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

பல் வேறு கஷ்டங்கள், இடையூறுகள் மத்தியிலும் எதிர்பார்த்ததை விட கணிசமான பங்கு மக்கள் நாளாந்தம் பிற்பகல் 3மணி தொடக்கம் 6.30 மணி மட்டும் நடைபெறும் கூட்டங்களில் 5நாட்களாக ஆர்வத்துடனும், மன மகிழ்வுடனும் பங்கு பற்றுவது போற்றத்தக்க தொன்றாகும். பங்குத்தந்தையர்கள் தங்களை முற்று முழுதாக அர்ப்பணித்து புதுப்புனல் நிகழ்வுகளைச் சித்தி பெற நடாத்தி வருவது மக்களுக்கு இன்னும் உற்சாகத்தைத் தூண்டி வருகிறதுடன் மக்களின் எண்ணிக்கையையும் பெருக்குகிறது.

## புதிய அப்போஸ்தலிக்க சுற்றுமடல்

கடந்த செவ்வாய் 5-10-93 அன்று ''உண்மையின் மாண்பு'' ''வெறித்தாத்திஸ் ஸ்பிளென்டோர்'' (Veritatis Splendor) என்னும் அப்போஸ்தலிக்க சுற்றுமடல் வெளியிடப்பட்டது.

இச்சுற்றுமடல் பற்றி இந் ஞாயிறு மூவேளைச் செபத்தில் குறிப்பிட்ட 2 ஆம் அருளப்பர் சின்னப்பர், பல காலமாக எதிர் பார்க்கப்பட்ட விவாதிக்கப்பட்டுள்ள இச் சுற்றுமடல் பல விமர்சனங்களால் திசை மாற்றப்பட்டு குழம்பியிருக்கும் அதே வேளையில், தனது அங்கத்தினருக்கு சரியான வழியைக் காட்ட வேண்டியது திருச்சபையின் கடமையாகிறது என்றார்.

மாறி வரும் காலத்திற்கேற்ப அடிப்படைக் கொள்கைகளை மாற்ற முயன்றால்,

(தொடர்ச்சி 6ஆம் பக்ககம்)

## ஆயர் திருநிலைப்படுத்தலின் 1ஆம் ஆண்டு நிறைவு



**20-10-1993**

**மன்னார் ஆயர்**

**இராயப்பு ஞானானந்தர் யோசவ்**

**ஆண்டகை**

**அவர்களுக்கு**

## அன்புவாழ்த்துக்கள்

இந்நன்னாளில் மேன்மை தங்கிய ஆயரவர்கள் ஆன்ம சரீர வளங்களைக் குறைவறப்பெற்று இறை மக்கள் பணி நிறைவாகப் புரிந்து நீடுவாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்!

## இரு கருதினால்மார் காலமானார்கள்

இத்தாலியில் கருதினால் பிரான்சிஸ்கோ காரீனோ செவ்வாய் (5-10-93) அதிகாலை தனது 88வது வயதில் இறைபதம் சேர்ந்தார். 1927 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, 1951இல்ஆயராகவும்,1967இல் கருதினால் ஆகவும் உயர்த்தப்பட்ட இவர் பலேர்மோவின் பேராயராகவும் பணியாற்றினார்.

மடகஸ்கார் நாட்டைச் சேர்ந்த 72 வயதான கருதினால் புதனன்று (06-10-93) இறைபதம் அடைந்தார். 1945 இல் இயேசு சபையைச் சேர்ந்து, 1958 இல் குருவாகவும், 1971 ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 1976 இல் கருதினால் ஆக உயர்த்தப் பெற்றார்.

இவரின் இறப்போடு திருத்தந்தையை தேர்ந்தெடுக்க தகுதி பெற்ற 80 வயதுக்குட்பட்ட கருதினால்களின் எண்ணிக்கை 99 ஆகும்.

## யாழ் மறைமாவட்டத்திற்கு யாழ் ஆயர் அளிக்கும் முதற் கனிகள் குருத்துவ திருநிலைப்படுத்தல் ● 16-10-1993



அருட் செல்வன் அன்ரனி ஞானப்பிரகாசம் இளவாலை புனித யாகப்பர் பங்கைச் சேர்ந்த திரு. மத்தியூஸ் அன்ரனி, திருமதி அன்ரனி மரியம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

03-04-1957 இல் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடமகாவித்தியாலயத்திலும், கனிஷ்ட உயர்தரக் கல்வியை இளவாலை புனித என்றியரசர் கல்லூரியிலும் கற்றுத் தேறினார்.

பின்னர் யாழ். கொழும்புத்துறை, புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இணைந்து இறையியல், மெய்யியல் பயிற்சி நெறிகளைக் கற்றுத் தேர்ந்தார்.

யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் 16-10-93 சனிக்கிழமை, காலை 9.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட இருக்கும் இவர் தமது முதல் திருப்பலியை 20-10-93 புதன் கிழமை காலை 7.30 மணிக்கு மானிப்பாய், புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுப்பார்.



அருட் செல்வன் எறிக் றொஷான் அச்சுவேலி, புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த திரு. அருளானந்தம் அரசரட்ணம், திருமதி அரசரட்ணம் மரியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.

02-07-1963 இல் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை அச்சுவேலி, புனித திரேசாள் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். தமது ஆரம்ப குருத்துவப் பயிற்சியை புனித மாட்டீனார் குருமடத்திலும், இறையியல், மெய்யியல் பயிற்சி நெறிகளைக் கொழும்புத்துறை, புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்திலும் கற்றுத் தேர்ந்தார்.

யாழ். ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் 16-10 93 சனிக்கிழமை, காலை 9.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட இருக்கும் இவர் தமது முதற் திருப்பலியை 18-10-93 திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு அச்சுவேலி, புனித சூசையப்பர்ஆலயத்தில் ஒப்புக் கொடுப்பார்.

## பாடநூலைப் பயன் படுத்தாதீர்கள்

கிறிஸ்தவ மதிப்பீடுகளை ஒதுக்கி வைத்துள்ள, எயிட்ஸ் நோய் குறித்த, சிம்பாவே அரசின் பாடநூலை அந்நாட்டின் கத்தோலிக்க பாடசாலைகள் பயன்படுத்த வேண்டாமென தலத்திருச்சபை விண்ணப்பித்துள்ளது.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

# இளைஞர் திருச்சபையின் தூண்கள்

நமது சுற்றுச் சூழலை சற்று அவதானித்தால் ஓர் உண்மை புலனாகிறது, தெளிவாகின்றது. ஓர் இலட்சியவாதி தன்னை முற்றாக அர்ப்பணித்து, தனது சகல சக்திகளையும் ஒன்று திரட்டி, அவற்றை தகுந்தவாறு பயன்படுத்தினால், பல இடையூறுகள் மத்தியிலும் தியாகத்தின் ஊடாக தன் இலக்கை அடைய முடியும். இக்காலத்தில் இவ்வுண்மை சிறப்பாக நம் இளைஞர் மத்தியில் நிறைவடைவதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது.

இளைஞர்களுக்கு தக்க துணையும் வழிகாட்டுதலும் இருப்பின் அவர்களைக்கொண்டு எத்தனையோ வியத்தகு காரியங்களைச் செய்து முடிக்கலாம்.

இதை நன்கு உணர்ந்திருக்கின்றார் நமது திருச்சபைத் தலைவர் 2ஆம் அருள் சின்னப்பர். அவர் செல்லுமிடமெல்லாம் இளைஞர்களைச் சந்திக்கத் தவறுவதில்லை, அவர்களும் மிகவும் உற்சாகமாக அவருக்கு வரவேற்பளிக்கின்றனர். அண்மையில் அவர் மேற்கொண்ட திருப்பயணங்களில், ஐக்கிய அமெரிக்காவிலும், முன்னாள் சோவியத் யூனியனிலும் பல இலட்சக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுகூடி, அவர் விடுத்த செய்திக்கு ஆர்வமுடன் செவிமடுத்து, வரவேற்பு அளித்தனர் என்றால், மலருகின்ற பருவத்தில் இவ் இளைஞர் கொண்டிருக்கும் இலட்சியம் எவ்வளவோ உயரியது என்று நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

இன்று இளைஞர்கள் திருச்சபையிடமும், அதன் தலைவர்களிடமும் எதிர்பார்ப்பது இது ஒன்றுதான்; ''எங்களுக்கு வழி காட்டுங்கள்; துணை நில்லுங்கள்.''

திருச்சபையின் தலைமை கொடுத்த இந்த முன்மாதிரிகை திருச்சபையின் அடிமட்டம்வரை பின்பற்றப்பட வேண்டும். திருச்சபையின் தலைவர் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி ஆற்றல் மிக்கதொரு, ஆக்கபூர்வமான — பெண்பாலார் மாத்திரமல்ல, ஆண்பாலாரும் கொண்ட — இளைஞர் அணியின் தேவையை ஒவ்வொரு பங்குத்தளமும் உணரட்டும். இளைஞர்களின் திறமையையும், உற்சாகத்தையும் பெரியோர்கள் ஊக்குவிக்கட்டும். சிறந்ததோர் தலைமைத்துவம் இருப்பின் அதனால் கெடுதல் ஒன்றும் இல்லை; நன்மையே விளையும்.

இளைஞர்களின் வாழ்க்கை பசுமை நிறைந்த வாழ்க்கை; ஆயினும் காட்டாறு போன்றது, அதனைச் செவ்வனே பயன்படுத்தினால் ஆக்கம்; இல்லையேல் அழிவு.

மலருகின்ற பருவத்தில் இருப்போர் சாதாரணமாக அனைத்தையும் உன்னிப்பாகக் கவனிப்பர்; அறிந்துகொள்ள அவாவுள்ளவர்; ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்புடன் இருப்பவர். இவர்களுக்கு வேண்டியது ஒன்றே ஒன்றுதான்: வழிகாட்டி உறுதுணையாயிருத்தல்.

இளைஞர்களுக்கென்று பல அணிகள் நமது மறைமாவட்டத்தில் ஒரு காலத்தில் செயல்பட்டன. சிறுவர் சிறுமியருக்கான நற்கருணை வீரன் சபை, இளைஞருக்கு மரியாயின் சேனை, இளம் கிறிஸ்தவர் அணி, கல்லூரி கத்தோலிக்க மாணவர் அணி, இன்னும்பல. சீருடனும், சிறப்புடனும் பலரும் போற்றும் வண்ணம் செயற்பட, இவ்வணிகள் பல மறைந்தொழிவதற்கு காரணம் என்னவென்று சிந்திப்பது சிறப்பு வாய்ந்தது. இளைஞர்கள் மத்தியிலே உற்சாகம் இன்மையா? அல்லது வழிகாட்டிகளிடத்திலே போதுமான திட்டமும் நம்பிக்கையும் இல்லாமையா?

எத்தகைய காரணங்களாக இருப்பினும் இளைஞர் அணிகள் மீண்டும் துவக்கப்பட வேண்டும். இளைஞர்கள்தான் எதிர்காலத் திருச்சபையைக் கட்டிக் காப்பவர்கள். எனவே எல்லா மட்டங்களிலும் இளைஞர் அணிகள் உருவாகட்டும், வளரட்டும். எதிர்காலத் திருச்சபையைப் பேணிக் காக்கட்டும்!

## திருமறை அறிவை வளர்ப்போம்

# கிறிஸ்தவ கோட்பாடு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**10. கிறிஸ்தவரல்லாதார்**

திருச்சபையில் அருட்சாதனங்களே மக்களுக்கு மீட்பு வழங்கும் சாதாரண வழிகளாக இருந்தபோதிலும், இறைவன் தமது அன்பிற்கும் மீட்பின் அகண்ட தன்மைக்கும் எல்லை விதித்துள்ளார் எனக் கருதுவது அவரையே ஊறுபடுத்துவதாகும். இதனால் தான் ஒரு கிறிஸ்தவன், திருச்சபையில் மீட்பைக் கண்டடைந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறான். வெளிப்படையாகத் திருச்சபைக்குச் சேர்ந்திராவிடினும், தமது மனச் சாட்சியின்படி வாழும் நல்லெண்ணமும் பெருந்தன்மையுமுள்ள மக்கள் அனைவரையும் கிறிஸ்துவின் வழியாக இறைவனது நன்மைத்தனம் மீட்குமென அவன் உறுதியாக நம்புகிறான். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் கூறப்பட்டுள்ளவாறு; ''தங்களது குற்றத்தினாலன்றி வெளிப்படையாக இறைவனை இன்னும் ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும், இறை அருளின் துணையோடு உண்மை நெறியிலே நடக்க முயல்பவர்களுக்கும், அனைத்தையும் பராமரிக்கும் இறைவன் மீட்பிற்குத் தேவையான உதவிகளை தர மறுப்பதில்லை. ஏனெனில், அவர்களிடம் காணப்படும் நன்மைகள், உண்மைகள் அனைத்தையும் நற்செய்திக்குத் தயாரிப்பாகவும் மனிதர் வாழ்வைக் கொண்டிருக்கும் வண்ணம் அவர்களுக்கு உள்ளொளி ஊட்டுபவரால் தரப்பட்டதாகவும் திருச்சபை மதிக்கிறது'' (திருச்சபை 16). இதனால்தான், இறைவனுக்கும் தன்னிலே இயேசு கிறிஸ்து செயற்படுத்தும் மீட்புக்கும் சான்று பகருகின்ற தனது கடமையையும் பெரும்பேற்றையும் ஓர் உண்மைக் கிறிஸ்தவன் உணர்ந்திருக்கின்றான்.

**11. நித்திய வாழ்வு**

1. கிறிஸ்துவிலும், பரிசுத்த ஆவியிலும் தான் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம், கிறிஸ்தவன் இறைமகனின் மகத்துவத்தை முன்வந்து ஏற்றுக்கொள்ளுகிறான். கிறிஸ்துவில் அவன் இறைவனோடு கொண்டிருக்கும் ஐக்கிய வாழ்வு அவனிடத்தில் ஏற்கெனவே பிரசன்னமாயிருக்கும் நித்திய வாழ்வாகும். ஆகவே, இக்கொடையைப் பேணிப் பாதுகாத்து விருத்திசெய்வதும் அது முழுமலர்ச்சி அடையச் செய்வதும் அவனது கடமையாகும். பிரமாணிக்கமாக

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# ம. மே. மா. (D. P. C.) ஞாயிறு சிறப்பு வழிபாடுகள்

## ஒக்ரோபர் 10

### குருக்கள் — துறவியர்

**முன்னுரை**

தற்போது யாழ் திருச்சபை மாநாட்டுக்கு ஆயத்தமாக தனதுமறைவட்டத்தினை ஆயத்தம் செய்து வருகின்றது.

இன்று குருக்கள், துறவியர், உருவாக்கல் நிலையில் உள்ளோரின் தினமாக உள்ளது. இன்றைய வழிபாடு. இவர்களின் வாழ்வு, பணி, உருவாக்கம் என்பவற்றின் உட்பொருளை கொண்டதாக அமைகின்றது.

இன்றைய முதல் வாசகமானது இசையாஸ் இறைவாக்கினரின் அழைப்பை எடுத்துக் கூறுகிறது. அவர் பாவத்திலிருந்துஇறைவனால் சுத்திகரிக்கப்பட்டு இறைவனின் வார்த்தையை மக்களுக்கு அறிவிக்க தெரிந்தெடுத்து அனுப்பப்படுகின்றார்.

இரண்டாம் வாசகமானது இறை பணியாற்ற அழைக்கப்பட்டவர்கள் ஒரு மனப்பட்டவர்களாகவும், அன்புள்ளம் கொண்டவர்களாகவும் இறைவன் தந்த ஆற்றல்களை திறமைகளைமற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பவர்களாகவும் இருக்கவேண்டுமென்று அறிவுறுத்துகிறது.

இன்றைய நற்செய்தி வாசகம் அழைக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் கிறிஸ்துவில் நிலைத்திருந்து நற்பணியாற்ற வேண்டுமென்று எடுத்தியம்புகின்றது.

எனவே .........

**வாசகம்**

- இசை. 6 :1, 6 – 8
- உரோ. 12 : 1 – 13
- அரு. 15 : 1 – 6

**மறையுரை :**

(பார்க்க : பக்கம் 3)

**விசுவாசிகள் மன்றாட்டுக் குறிப்புகள்**

★ குருக்கள், துறவிகள் தம்மை முழுவதும் நிபந்தனையற்ற முறையில் இறையரசுக்காக கையளித்திட...

★ நற்செய்தி மதிப்பீடுகளான ஏழ்மை, கற்பு, பணிவு என்பவற்றை வாழ்ந்து கிறிஸ்துவை நெருங்கிய விதமாய் பின்பற்ற...

★ கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்குரைக்கின்ற பணியைத் தொடர்ந்தாற்றிட....

★ உருவாக்கல் நிலையில் உள்ளோர் தம் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து உருவாக்கம் பெற்றிட...

★ இறைவனுக்குத் தங்களை நேர்ந்தளித்தவர்கள் தங்களைத் தானே புதுப்பிப்பதன் ஊடாக மேய்ப்புப் பணி மாநாட்டின் நோக்கத்தை நிறைவு செய்திட...

## ஒக்ரோபர் 17

### வேதாகமம்

**முன்னுரை**

வாக்கு மனுவுருவானார். ஆனால் அவர் நம்மிடையே குடி கொண்டு விட்டாரா? என்பதே ஒரு கேள்விக் குறியாக நிற்கிறது. அவர் குடிகொள்ளத் தடையாக இருப்பவற்றைச் சிந்திக்கவும், அவரை நம்மிடையே குடிகொள்ள வைக்கக் கூடிய வழி வகைகளைச் சிந்திக்கவுமே இந்த வேதாகம வார ஞாயிறு நம்மை அழைக்கிறது, இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ வரம் வேண்டித் தொடரும் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**வாசகம்**

- 1 ஆம் வாசகம் இசை 6 : 1 – 9.
- பதிலுரைப்பாடல் சங்கீதம் 104 : 1–9.
- 2 ஆம் வாசகம் அப். பணி 2 : 1 – 11.
- அல்லேலூயா பாடல் :– ''வாக்கு மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்''
- அரு 1 : 1 – 12.

**மறையுரை :**

(பார்க்க : பக்கம் 3)

**விசுவாசிகள் மன்றாட்டுக் குறிப்புகள்**

★ மனுவுருவான வார்த்தை நம்மிடையே குடிகொள்ள எம்மிடம் இருக்கும் தடைகளை நாம் இனம் கண்டுகொள்ள, வரமருள வேண்டுமென்று...

★ புனிதப்படுத்திப் புதுப்பிப்பவரான இறைவா, எம்மையும் புனிதப்படுத்தி உமது வார்த்தையை எமது வாழ்வாக்க வரமருள இறைவா...

★ எமது நாளாந்த வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை, சஞ்சலங்களை உமது வார்த்தையின் ஒளியில் எதிர்கொள்ள வரமருள...

★ எமது வாழ்வைப் புதுப்பிக்க நாம் எடுக்கும் அனைத்து முயற்சியும் வெற்றியளிக்க எமக்கு உறுதுணையாகஇருந்திட வேண்டுமென்று .......

**உங்கள் கவனத்திற்கு**

**மறை அறிவிப்பு**

**ஞாயிறு**

**24-10-1993**

1993 திருவழிபாட்டு நாட்காட்டியில் தயவுகூர்ந்து இம்மாற்றத்தைச் செய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு

## குருக்கள் துறவியரின் புதுப்பித்தல்

"புதுப்பிக்கப்பட்ட பகிர்ந்து வாழும் திருச்சபையாக" எமது மறை மாவட்ட திருச்சபையை உருவாக்க முன்வந்துள்ள இவ்வேளையில் தேவையானது ஒன்று, குருக்கள் துறவிகள் உருவாக்கல் நிலையில் உள்ளோரின் புதுப்பித்தலே. எனவே அவர்கள் வாழ்வு, பணி, உருவாக்கல் என்ற ரீதியில் இப்புதுப்பித்தலை அணுகுவோம்.

1 குருக்கள் துறவிகளின் வாழ்வு

இறைஅரசுக்காக தம்மை முழுமையாக, நிபந்தனை அற்ற முறையில் கையளிக்க குருக்கள், துறவிகள் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளார்கள். எனவே இவர்கள் இறைவனின் அழைப்பை உணர்ந்து அதற்கு சுதந்திரமாக பதில் அளித்து வாழ அழைக்கப்படுகிறார்கள். கிறிஸ்துவினுடைய அரச குருத்துவ இறைவாக்கு உரைக்கின்ற பணியைத் தொடர்ந்து ஆற்றுகின்றார்கள்.

நற்செய்தி மதிப்பீடுகளான ஏழ்மை, விரதத்துவம், கீழ்ப்படிதல் என்பவற்றை வாழ்ந்து கிறிஸ்துவை நெருங்கிய விதமாக கண்டுபாவிக்கின்றார்கள். இவர்கள் ஏழ்மை வாழ்வினால் பகிர்தல் வாழ்வுக்கும், மணத்துறவு வாழ்வினால் இயேசுவைப் போல் பரந்த அன்பு வாழ்விற்கும், கீழ்ப்படிவு வாழ்வினால் இறைஅரசினையும், அவரது சித்தத்தினையும் தேடிச்செல்லும் ஆழ்ந்த விசுவாச வாழ்விற்கும் சாட்சி பகர்கின்றார்கள்.

இவ் அர்ப்பணவாழ்வு அடிப்படையில் ஓர் கூட்டு வாழ்வாகும். துறவிகளின் இக்கூட்டு வாழ்வின் சாட்சியம் விண்ணக வாழ்வின் முன்சுவையாக உள்ளது. இத்தகைய அர்ப்பண வாழ்வை வாழும் குருக்கள், துறவிகள் வாழ்வினது அடி அத்திவாரம் செபமாகும். செபத்தினூடாக தம் வாழ்வுக்கும், பணிக்கும்தேவையான ஒளியையும், சக்தியையும் கண்டு கொள்கிறார்கள்,

2 குருக்கள் துறவிகளின் பணி

கிறிஸ்துவின் அரச குருத்துவ இறைவாக்கு உரைக்கும் பணியினை குருக்கள் துறவிகள் தம் வார்த்தையாலும், வாழ்வாலும் தொடர்ந்து ஆற்றுகின்றார்கள்.

அரச பணி :— இவ் உலகில் இறை அரசைக்கட்டி எழுப்புதலும் அதற்கு சாட்சி பகர்தலும் இப்பணியாகும். இதைத்தான் நாம் மேய்ப்புப் பணி அல்லது ஆயனுக்கு உரியபணி என்று சொல்லுகின்றோம். கிறிஸ்தவ மதிப்பீடுகளில் வாழ்தலும், தம் பணி வாழ்வின் ஊடாக இம் மதிப்பீடுகளை இறைமக்களின் மனதில் பதியச் செய்தலும், இவர்கள் கடமை ஆகும்.

குருக்கள் துறவிகள் ஆன்மீக வழிகாட்டியாக இருக்கிறார்கள். பணித்தளங்களில் இவர்களுக்கும் மக்களுக்கும் மத்தியிலே ஓர் அன்பு உறவு நிலவ வேண்டும். (அரு. 10: 14, 15).

குருத்துவ பணி:— இப் பணி திருப்பலி மற்றும் அருட்சாதனங்களை நிறைவேற்றுவதுடன் அவற்றை ஆழமாக தம் அர்ப்பணவாழ்வில் அனுபவிப்பதிலேயே தங்கியுள்ளது. இவர்கள் வாழ்வில் ஊற்றும் உறைவிடமும் நற்கருணை ஆகும். தம்மை முழுமையாக மக்களுக்கு பகிர்ந்து வாழ இந்த நற்கருணை அடையாளமாக அமைகின்றது. இதன் வழி கிறிஸ்துவின் "கொடுத்தல்" அல்லது "பகிர்தல்" வாழ்வில் முழுமையாக பங்கு கொள்கின்றார்கள். கிறிஸ்துவின் பலியை இவர்கள் தொடர்ந்து நிறைவேற்றுகிறார்கள்.

இறைவாக்கு உரைக்கும் பணி:-

குருக்கள் துறவிகள் நற்செய்தியை எல்லோருக்கும் அறிவிப்பதை தம் முதற்கடமையாகக் கொண்டுள்ளார்கள். இது ஒன்றிணைந்தமனித விடுதலையை மையமாகக் கொண்டுள்ளது(லூக்4: 18,19.) இவ்விதம் இறைமக்களை உருவாக்கி வளர்க்கின்றார்கள்.

தங்களின் ஞானத்தை அன்று, இறைவாக்கை போதித்து, எல்லாரையும் மனமாற்றத்திற்கும் புனிதத் தன்மைக்கும் வலியுறுத்தி அழைக்க கடமைப்பட்டுள்ளார்கள். இன்றைய சூழ்நிலையில் இது பெரும்பாலும் மிக கடினமானது. மக்களை கவரும் முறையில் நற்செய்தி உண்மைகளை நடைமுறை வாழ்க்கை சூழ்நிலைகளோடு இணைத்து விளக்க வேண்டும்.

3 குருத்துவ துறவற நிலையினரின் தற்போதைய நிலை

(அ) பணிகள் அதன் வடிவங்கள்

— பெரும்பான்மையான மறைமாவட்டக் குருக்கள் பங்குத்தந்தையர்கள்.
— துறவிகளில் பெரும்பான்மையோர் கல்வி, மறைக் கல்விப் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.
— நோயாளர் வயோதிபர் பராமரிப்பு.
— சிறுவர், மாணவர், அநாதைகள், உளவளம் குன்றினோர் பராமரிப்பு.
— உளவளத்துணை சேவை
— குருத்துவ துறவற நிலையை உருவாக்கல்.

இவை இன்று முக்கிய பணிகளாக செய்யப்பட்டு வந்தாலும் இன்னும் பல தேவைகள் இன்று குருக்கள் துறவிகளின் பணியை வேண்டி நிற்கின்றன. அதே வேளையில் போர்க்கால நிகழ்வுகளினால் இவர்கள் பல இடையூறுகளை சந்தித்த வண்ணமாக இருக்கின்றார்கள்.

(ஆ) இன்றைய நிலையில் உருவாக்கம்

கிறீஸ்து தம் சீடர்களை எவ்வாறு உருவாக்கினாரோ அதுவே இக் குருத்துவ துறவற உருவாக்கலின் அடிப்படையாக அமைந்துள்ளது. இவ் உருவாக்கம் தொடர்ச்சியான ஒரு விடயம். துறவிகளாக குருக்களாக தம்மை அர்ப்பணிக்க முன்வருவோரது அழைத்தலை இனம் கண்டு அதை வளர்ப்பது ஒரு பெரிய பொறுப்பாக இருக்கின்றது. மிக உன்னத புனிதத் தன்மையை அடைய எப்பொழுதும் இவர்கள் முயல வேண்டும். இதனால் இறைமக்கள் அனைவருக்காகவும் ஊழியம் புரிவதில் நாளடைவில் மிகத் தகுந்த கருவிகளாக உருப்பெறுவார்கள். அழைப்பது இறைவன். அவ் அழைப்பைப் பாதுகாத்து வளர்த்தல் மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிறீஸ்தவனிலும் தங்கியுள்ளது.

4 எதிர்காலத்தை நோக்கிய பார்வை

தூரத்துப் பார்வை, எதிர்கால கனவுகள் இவைகள் இல்லையேல் எம்மத்தியில் தேக்க நிலையும் மடிவும் ஏற்படலாம். எனவே நாம் செய்ய வேண்டியது :

— ஊற்றிற்கு (கிறீஸ்து) திரும்புதல்.
— அந்தஸ்து நிலையில் இருந்து சேவையையும் அர்ப்பணத்தையும் மீளப் பெறுகின்ற ஒரு மனமாற்றம்.
— தற்போதைய சமூகத்தின் தேவைகளை சீர் தூக்கி அதிமுக்கிய தேவைகளை இனங்கண்டு வகைப்படுத்தி பதிலிறுத்தல்.
— நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு முன் உரிமை அளித்தல்.
— அடிப்படை வாதக் குழுக்களின் சவால்களை எதிர் நோக்குதல்.

துறவற குருத்துவ உருவாக்கத்துக்கு பொது நிலையினர் கூடிய பங்களித்தல்.

(குருக்கள் துறவிகள் உருவாக்க நிலையினர் குழு)

## வேதாகமத்தில் நற்செய்தி

வாக்கு என்ற வார்த்தை ஆதியாகமத்தில் இருந்து வேதாகமம் ஈறாக ஆழ்ந்த அர்த்தம் கொண்டதாக இருக்கிறது எபிரேயர்களின் கருத்துப்படி கடவுளுடைய வாக்கு படைப்புக்கெல்லாம் ஆதிகாரணம். (ஆதி. 1: 1 அதி. சங். 32: 6). அவ்வாக்கே, மனித சக்தியைக் கடந்ததோர் ஆற்றலாக இறைவாக்கினரிடம் செயல் புரிந்தது; அதுவே இஸ்ராயேல் மக்களை இயல்புக்கு மேற்பட்டதோர் கதிக்கு நடத்திச் சென்றது (ஞா. 16: 26; 18: 13). யூதர்கள் ஆன்மீக வாழ்விற்கு ஊற்றும் துணையுமாய் இருந்தது (உப. 32: 47; சங். 118: 25–37). சுருங்கச் சொல்லின் கடவுளுடைய வாக்கு அவரது ஞானத்தினுடைய (பழ. 8: 22–36; ஞான 7: 21–30) ஆற்றலினுடைய (இசை 55: 10) நிறைவான வடிவம் எனலாம்.

மனிதனாக இவ்வடிவெடுத்தலே 'வாக்கு மனுவுருவானார்' என்பதாகும். கிறீஸ்துவில் வாக்கு ஓர் நிறைவுகாண்கிறது. "உண்மையான ஒளி அவ் வாக்கு. ஒவ்வொருவனையும் ஒளிர்விக்கும்மாட்சிமையாக," வார்த்தை வடிவாக நம்மிடையே குடிகொண்டு இருக்கின்றார். இந்தவகையில் வேதாகமத்தில் நற்செய்தி முதன்மைபெறுகின்றது.

நற்செய்தி வழியாக இன்றும் எம்மோடு பேசிக்கொண்டே இருக்கின்றார். எனவே இதன் படிப்பினைகளை எம் வாழ்க்கைப் படிமுறைகளாக மாற்றும்போது வார்த்தை நம்மிடையே குடிகொள்கின்றார். குடும்பத்தின் குன்றாத்தீபமாக இவ்வார்த்தையைக்கொள்ளும் போது, நாளாந்தம் அந்த வார்த்தையை வாசிக்கும் போது. அது தரும் செய்தியின் படி வாழ முனைகின்றபோது, அது விடுக்கும் சவால்களை எதிர்கொள்ளும்போது, அதனால் நாம் பெறும் அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்கின்றபோது.... வார்த்தை நம்மிடையே குடிகொள்கிறார்,

இன்றைய முதல்வாசகமும் இரண்டாம் வாசகமும் வார்த்தை நம்மிடையே குடிகொள்ளத் தடையாக இருக்கும் தீய சக்திளைப் பரிசுத்த ஆவியின் வல்லமையால் சுட்டு எரித்து ஒரு புதுப்பிறப்படைய எம்மை அழைக்கின்றது. எனவே எமது மறைமாவட்ட மகாநாட்டின் புதிய சிந்தனைகளோடு நாம் எம்மைப் புதுப்பித்து வாழ தூய ஆவியின் துணையை நாடுவோம்.

## பங்குத் திருச்சபை புதிய சித்தைகளில்...

★ சந்திரன்.

மேய்ப்புப் பணிக்கான மாநாடு ஒன்றைக் கூட்டி எமது தலத்திருச்சபை தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ள முனைந்து நிற்கும் காலமிது. உண்மையில் திருச்சபை தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ள எடுக்கும் எந்த முயற்சியும் பங்குத் திருச்சபை மட்டத்தில்தான் செயற்படுத்தப்பட வேண்டும். புதுப்பித்தலின் செயற்பாடுகளம் பங்குத் திருச்சபையே. ஏனெனில் தற்போதுள்ள அமைப்பின்படி உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் அடிப்படை அலகாக இருப்பதுபங்குத்திருச்சபையே. அதாவது திருச்சபை நடைமுறையில் திருச்சபையாய் இருப்பது எமது பங்குகளிலேயே.

பங்குத்திருச்சபை என்றால்......

பங்குத்திருச்சபை என்பது முந்த முந்த ஒரு உயிர்வாழும் சமூகம் என வரையறை செய்கிறது திருச்சபையின் சட்டக் கோவை. ஆகவே பங்கு என்பது அங்கு அமைந்துள்ள கல்லாலான ஆலயத்தைக் குறிப்பதல்ல. ஆனால் அங்கு வாழும் மக்களைக் குறிப்பது. அவர்கள் ஒரு சமூகம்; குறிப்பிட்ட ஒரு வாழ்க்கை முறையில் ஒன்றிணைந்திருக்கும் ஒரு குழுமம் என்பதைக் குறிப்பது. ஆகவே பங்கு என்பது அடிப்படைத் தலத்திருச்சபையாகும்.

இவ்வாறு பங்கை நாம் திருச்சபையின் அடித்தள வாழ்வலகாகக் கொள்ளும் போது திருச்சபைக்குரிய அடிப்படைப் பண்புகளையும் அது கொண்டிருக்க வேண்டுமென்பது தெளிவு. அதாவது ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்தது போல இறைவார்த்தையைக் கேட்டு அப்போஸ்தலர்களின் படிப்பினைகளில் நிலைத்திருப்பவர்களாகவும், செபிப்பவர்களாகவும், நட்போடுஉறவாடுபவர்களாகவும், பகிர்ந்து வாழ்பவர்களாகவும், இத்தகைய வாழ்வை அப்பம் பிட்குதலில் வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். அதாவது அன்மைக் கிறிஸ்தவ குழுமமாய் அவர்கள் வாழ வேண்டும்.

இன்றைய நிலை.

எமது பங்குகளின் இன்றைய நிலை அதன் உண்மை நிலைக்கு அருகிலும் இல்லை என்பது

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## திருத்தந்தை (29-9-93) அளித்த பொதுப்பேட்டி

குருக்களும், ஆயர்களும் குருத்துவ அழைத்தலை ஊக்குவிக்கும் பணியில் ஒவ்வொரு தனிமனிதனின் சுதந்திரத்தை வெகுவாய் மதிப்பதோடு குருத்துவத்தின் மேன்மை மற்றும் இறை அழைத்தல் பற்றிய நற்செய்தி அறிவுறுத்தல்களை எப்பொழுதும் காக்க வேண்டும் என்றார் திருத்தந்தை. இன்னும் இவர்கள் இளைஞர்கள் தங்களையே அர்ப்பணித்து பிறருக்கு தாராளமனதுடன் சேவை புரிந்து தியாகத்துடன் வரையறையின்றி தன்னையே பிறருக்கு வழங்கவும் தூண்ட வேண்டும் என்றார்.

இன்று சில இடங்களில் இறை அழைத்தல் இல்லாத ஒரு பிரச்சனையை அனுபவித்து வருகின்றனர். இருந்த போதிலும் அநேக இளைஞர் மத்தியில் ஒரு ஆன்மீகப் புதுப்பித்தலுக்கான நல்ல அடையாளங்கள் காணப்படுகின்றன.

ஆண்டவனின் திருவருளில் நம்பிக்கை கொண்டு திருச்சபையின் அங்கத்தினர் அனைவரும் குருத்துவ அழைத்தலுக்காக தொடர்ந்து உழைத்து அதற்காக ஜெபிப்பார்களாக! இதன் வழி குருத்துவத்தின் மூலம் தனக்கு பணிபுரிபவர்க்கு ஆண்டவர் விடுக்கும் அன்பின் அழைப்பிற்கு அநேக இளைஞர்கள் பதில் சொல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மேய்ப்புப்பணி மாநாடு
## குழு இணைப்பாளர்கள்

A வேதாகமம் — அருள்திரு S.V. B. மங்களராஜா
புனித சவேரியார் உயர் குருமடம்
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

B நற்செய்தி அறிவிப்பு கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடல் — அருள்செல்வி மேரி கிறிஸ்ரபெல்
திருக்குடும்ப கன்னியர் மடம்
மானிப்பாய்

C திருவழிபாடு — அருள்திரு R. M G. நேசநாயகம்
புனித யாகப்பர் ஆலயம்
குருநகர் — யாழ்ப்பாணம்

D குருக்கள் துறவியர் குருமாணவர் — அருள்திரு றெஜி றாஜேஸ்வரன்
புனித மடுத்தினார் இளங்குருமடம்
யாழ்ப்பாணம்

E பங்குத் திருச்சபை — அருள்திரு P. இருதயதாஸ்
ஆயர் இல்லம் — யாழ்ப்பாணம்

F பொதுநிலையினர் இளைஞர் குடும்பம் — அருள்திரு S. J. இராசநாயகம்
புனித அன்னம்மாள் ஆலயம்
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்

G சமூகத்தொடர்பு — அருள்திரு அன்ரன் மத்தாயஸ்
புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்
நல்லூர், யாழ்ப்பாணம்

H நீதி சமாதானம் மனித முன்னேற்றம் — அருள்திரு றேஜிஸ் இராசநாயகம்
நல்லாயன் நடுநிலையம்
பல்கலைக்கழகஒழுங்கை, திருநெல்வேலி

I கல்வி மறைக்கல்வி — திரு M. யேசுதாசன்
ஆசிரியர், புனித பத்திரிசியார்
கல்லூரி, யாழ்ப்பாணம்

J கலை கலாசாரம் — திரு V. J. கொன்ஸ்ரன்ரைன்
திருமறைக்கலாமன்றம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்

அருள்திரு J. நிக்கலஸ்
செயலர் — D. P. C.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

## பங்குத்திருச்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகத் தெளிவு. வாழ்வை மாற்ற வேண்டிய இறை வார்த்தை கேட்டலும், வாழ்வின் வெளிப்பாடான அப்பம் பிட்குதலும் (திருப்பலி) இன்று சடங்கு மனப்பான்மைக்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டன. சுயமாகவும் ஆவியால் ஏவப்பட்டு நிகழ வேண்டிய செபம் செபமாலையினுள்ளும் பக்தி முயற்சிகளினுள்ளும் மட்டும் சிறைப்பட்டு விட்டது. நட்போடு உறவாடுவதும், பகிர்ந்து வாழ்வதும் அருகிப் போய் சண்டை சச்சரவும், போட்டி பொறாமைகளும் ஏற்றத் தாழ்வுகளும் உட்புகுந்து விட்டன. மொத்தத்தில் பங்குத் திருச்சபைகளானவை திருச்சபைக்குரிய தன்மைகள் அனைத்தும் மங்கிப் போய் அல்லது திரிந்து போய் வெறும் நிர்வாக அமைப்புகளாக ஆவணங்களைப் பாதுகாக்கவும் அருட் சாதனங்களை வழங்கவும் இயங்கும் நிறுவனங்களாக மாறிப்போய் விட்டன. கிறிஸ்தவர்கள் குழு சார்ந்தவர்களாக அல்லாமல் அநாமதேயர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலை ஏற்பட பல காரணிகள் துணை போகின்றன. மக்களின் சமூகப் பொருளாதார நிலைகள் கணக்கிலெடுக்கப்படாமல் பிரதேச வாரியாகப் பங்குகள் ஏற்படுத்தப்பட்டமை. பங்குகளின் அளவு அளவுக்கதிகமாகப் பெருத்திருப்பது, திருப்பணியாளரின் பற்றாக் குறை, அவர்களுடைய ஈடுபாடின்மை என்பன போன்று பலவற்றை நாம் அவதானிக்கலாம்,

புதிய சித்தைகளில்...

எனவே எந்தத்துறையில் திருச்சபை புதுப்பித்தலைக் கொண்டுவர விரும்பினாலும் முதலில் பங்குத் திருச்சபையைப் புதுப்பிப்பது அவசியமாகின்றது. புதிய இரசத்தை பழைய சித்தைகளில் ஊற்றுவது முட்டாள்தனம் என்கிறார் இயேசு. ஆகவே புதிய இரசத்தை உள்வாங்கக் கூடிய புதிய சித்தைகளை நாம் பங்கு மட்டத்தில் தோற்றுவிக்க வேண்டும்.

லத்தின் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பங்கு அமைப்புக்குள்ளேயே திருச்சபைப் பண்புகளுடன் வாழும் சிறு சிறு குழுக்களை அமைக்க முயற்சித்து வெற்றியும் கண்டுள்ளனர். இவற்றை அடிப்படைக் கிறிஸ்தவ குழுமங்கள் (B. C. C) அல்லது அடிப்படைத் திருச்சபைக் குழுமங்கள் (B. E. C) என அழைக்கிறார்கள்.

இன்று எமது பங்குகளில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு விடையாக பங்குச் சபைகள், ஆலோசனைச் சபைகள் என்பன மும்மொழியப்படுகின்றன. அது நல்லது தான்; ஆனால் அவை ஆவியானவரால் இயக்கப்படும் கிறிஸ்தவ குழுக்களாக அல்லாமல் வெறும் மனித நிர்வாக அமைப்புகளாக மாறிவிடும் பட்சத்தில் பிரச்சனைகளுக்குத் தீர்வு அல்ல மேலும் குழப்பமே எஞ்சும்.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஆவியானவரையும், வார்த்தையானவரையும் சிறு சிறு குழுக்களில் செயற்பட விடுவதே. செய்வோமா?

# ஊக்குவிப்பாளர்கள்

### A. வேதாகமம்

1. அருட்திரு S.V. B. மங்களராஜா
2. அருட்திரு M.A.P.R. சவுந்தரநாயகம்
3. அருட்திரு A. பிலிப்
4. அருட்திரு P.P. பிலிப்
5. திரு. S. அந்தோனிப்பிள்ளை
6. திரு. P சூசைதாஸ்
7. திருமதி M.C.F. அன்ரனி
8. செல்வி வயலற் இம்மானுவேல்
9. செல்வி சாந்தி சின்னத்துரை
10. செல்வி எமிலியோலா பிரான்சிஸ்
11. அருட் செல்வன் டண்ஸ்ரன்
12. அருட் செல்வி ஜீடித்
13. திரு. S. ஹென்றி
14. செல்வி சுனிதா பெனடிக்ற்
15. செல்வி ஏபிரகாம் ஸ்ரெலா

### B. நற்செய்தி அறிவிப்பு கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடல்

1. அருட்செல்வி மேரி கிறிஸ்ரபெல்
2. செல்வன் மரியசீலன்
3. செல்வி மேரி லூக்கிறேசியா
4. செல்வி மரியகொறற்றி
5. செல்வி வசந்தி
6. அருட்செல்வி எவறெஸ்ரா
7. அருட்செல்வன் றெனால்ட்
8. அருட்செல்வி நிக்கலா
9. அருட்செல்வி அன்ரனிற்றா
10. திரு. பங்கிராஸ்
11. அருட்செல்வி வலன்ரைன்
12. திரு. டேவிற்
13. அருட்செல்வி நிசெற்றா
14. திரு. ஆனந்தராசா
15. செல்வி. றெஜினா
16. திருமதி. பாக்கியநாதர்
17. செல்வி. கிறிஸ்ரெலா
18. அருட்செல்வி. திரேசா
19. அருட்செல்வி. லொறன்ரீனா

### C. திருவழிபாடு

1. அருட்திரு. R.M.G. நேசநாயகம்
2. திரு. இ. அல்போன்ஸ்
3. அருட்சகோதரன். றொகான்
4. செல்வன். த.மொ. வசந்தநாயகம்
5. செல்வி. மரிஸ்ரெலா.அ
6. அருட்திரு. பெனற்
7. அருட்செல்வி. மெற்றில்டா
8. செல்வன். உதயராஜ்
9. செல்வி. பெனடிற் பூபதி
10. செல்வி.சி. செல்வினி
11. திரு இ.ம. ஜெயசீலன்
12. அருட்செல்வி. பொஸ்கோ
13. திரு. சூ. மரியநாயகம்
14. செல்வி. ஞா. செல்வமேரி
15. திருமதி. அ. ஜீனா
16. அருட்திரு. யாவிஸ்
17. அருட்செல்வி. மரியமலர்
18. செல்வி.நீ.வு. றஞ்சினி
19. செல்வி. கி. தனீஸ்வரி
20. செல்வி. ம. விக்டோறியா
21. செல்வி. எமில்டா
22. அருட்செல்வி. தயா
23. அருட்திரு. சாள்ஸ் கொலின்ஸ்
24. அருட்செல்வி. விஜயா
25. அருட்சகோதரன். சூசைப்பிள்ளை

### D. குருக்கள், துறவியர் குருமாணவர்

1. அருட்திரு றெஜி ராஜேஸ்வரன்
2. திரு M. மரியசூசை
3. திரு A. மருசலீன்
4. திரு S.J மரியநாயகம்
5. திரு. ஆனந்தராஜா
6. திருமதி. வசந்தி ஆனந்தராஜா
7. திரு. யோண்பிள்ளை
8. திருமதி. யோண்பிள்ளை
9. அருட் செல்வி காமலீற்றா
10. ,, சாந்தி
11. ,, அருள்
12. ,, எமறீற்றா
13. ,, இனிகா
14. ,, எட்னா
15. ,, [illegible]
16. ,, செல்வராணி
17. ,, புனிதராணி
18. அருட் தந்தை ஜீவேந்திரா போல்
19. ,, டேவிற்
20. திரு. A.S. அகஸ்ரீன்

### E. பங்குத் திருச்சபை

1. அருட்திரு P. இருதயதாஸ்
2. அருட்சகோதரி. ம. மறிஸ்ரெலா
3. திருமதி. சி. எம். மரியாம்பிள்ளை
4. திரு. சு. கென்றி
5. திரு. சு. மலக்கியாஸ்
6. திருமதி. மி. யூலியன்
7. திரு. வ. அல்பிறட்
8. செல்வி. றெ. டொறத்தி
9. அருட்சகோதரி. எம். பெனடிற்றா
10. திருமதி. வி. சி. அருளானந்தம்

### F. பொதுநிலையினர் இளைஞர், குடும்பம்

1. அருள்திரு. S.J. இராஜநாயகம்
2. திரு. தவம் சந்தியாப்பிள்ளை
3. திரு. M. தார்சீசியஸ்
4. அருள்திரு. P.J.D ஜெபரட்ணம்
5. அருட். சகோதரி லூசில்லா
6. திரு. சத்திய ஜீவன்
7. திரு. J.G இராசேந்திரம்

### G. சமூகத்தொடர்பு

1. அருட்திரு. அன்ரன் மத்தாயஸ்
2. திரு. ஜோசப்பாலா
3. செல்வி. இமல்டா
4. திரு. அமலதாஸ்
5. செல்வி. கீத்தா
6. திரு. சாம்
7. அருட்திரு. ஸ்ரலின்
8. அருட்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம்
9. திரு. வேதநாயகம்
10. திரு. அலெக்ஸ்
11. திரு. சௌந்திரம்
12. திரு. ஜேசுறாசன்
13. திரு. துரைரட்ணம்
14. அருட்திரு. ரூபன்
15. அருட்திரு. றெக்னோ
16. அருட்சகோதரி. நெவிஸ்
17. திருமதி. மகேஸ்வரி புவனா

### H. நீதி, சமாதானம் மனித முன்னேற்றம்

1. அருட்திரு. றெஜிஸ் ராஜநாயகம்
2. அருட்திரு. யேம்ஸ் பத்திநாதர்
3. அருட்திரு. B.F பொனிபஸ்
4. அருட்திரு. P.J.D ஜெபரட்ணம்
5. அருட்சகோதரி. மேரி பஸ்கால் H.F
6. அருட்சகோதரி. ஸ்ரெலா புஸ்பம் H.F
7. அருட்சகோதரி. விக்ரறின் H.C
8. அருட்சகோதரி. றீற்றா H.C
9. அருட்சகோதரி. லோறன்சியா
10. அருட்சகோதரி. திரேசில்டா A.C
11. அருட்சகோதரி. பரமேஸ் A.C
12. திரு. G.M செபஸ்ரியாம்பிள்ளை
13. திரு. றேமண்ட் முத்தையா
14. திரு. சூசைப்பிள்ளை சிறில்
15. திரு. பிரான்சிஸ் அருள்சோதி
16. திரு. A.C. ஜெபநாயகம்
17. திரு. S. பாலேந்திரா

### I. கல்வி, மறைக்கல்வி

1. திரு. ம. யேசுதாசன்
2. அருட்திரு. ஆர். எச். சகாயநாயகம்
3. அருட் செல்வி எம். அமலேஸ்
4. அருட் செல்வி எம். கொஸ்கா இரபாயேல்
5. அருட்செல்வி எம். அன்ரனற்
6. திரு. தோ. செபமாலை
7. திருமதி. ஆர். இருதயநாதன்
8. திருமதி. பி. எவ். சின்னத்துரை
9. செல்வி. பி. அன்ரனற்

### J. கலை, கலாசாரம்

1. V. J. கொன்ஸ்ரன்ரைன்
2. அருள்திரு. ஜெறோ செல்வநாயகம்
3. அருட்செல்வி. அழகேஸ்வரி
4. அருள்திரு. G. பிலேந்திரன்
5. திருமதி. A. ஜெனோவா
6. திரு. ஜோண்சன் ராஜ்குமார்
7. திரு. A. J. அண்டர்சன்
8. M. யேசுதாசன்
9. அருட்செல்வி டொறீன்
10. செல்வி இதயகீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக் கதை

## மனமுண்டானால் இடமுண்டு

மேசையில் கிடந்த புத்தகம் ''என்னப்பா என்னை இப்போது ஒருத்தரும் திறந்து படிக்கிறார்கள் இல்லையே'' என ஒரு தரம் அலுத்துக் கொண்டது. அப்போது அங்கே கிடந்த எல்லாப் புத்தகங்களும் அந்தப் புத்தகத்துடன் சேர்ந்து கொண்டன. எனவே ஒரு மகாநாடு நடத்தி இதற்கு யார் காரணம் என அறிய முற்பட்டன. திட்டமிட்டபடி மகாநாடு நடந்து கொண்டிருந்த போது புத்தகங்கள் எம்மை இந்நிலைக்கு ஆளாக்க வைத்தது யார் என்றுஆராயத் தொடங்கின. ஈற்றில் ''மின்சாரமே'' என ஒருமித்து முடிவு எடுக்கப்பட்டது. எல்லோரும் சேர்ந்து மின்சாரத்திடம் செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

புத்தகங்களைக் கண்ட மின்சாரம் அவர்களை இன்முகத்துடன் வரவேற்றது. ''நீ இல்லாமல் கடந்த 3 வருடம் எம்மை சரியாக மாணவர்கள் பயன்படுத்துகிறார்கள் இல்லை'' என ஒருமித்து குற்றம் சாட்டின. இதைக்கேட்ட மின்சாரம் புன்முறுவலுடன் ''தம்பிகளே! என்னைக் கண்டு பிடிப்பதற்கு யாரோ ஒருவன் கஷ்டப்பட்டு படித்ததினால் நான் கண்டுபிடிக்கப்பட்டேன். எனவே நான் இவ்வுலகுக்கு வர முதலும் பல அறிஞர்கள், மேதைகள் இருந்திருக்கிறார்கள். ஆகவே கடந்த 3 வருடம் நான் இந்தப் பிரதேசத்தில் இல்லாதது தான் உங்களை மற்றவர்கள் உபயோகப்படுத்தத் தடை என்று கூறுவது மிக பிழை. தம்பிகளே! அத்தோடு மக்கள் இப்போ வெறும் புத்தகப் பூச்சிகளாக இல்லாமல் சிந்திக்க தொடங்கி விட்டார்கள். மேலும் மக்கள் வாழ்க்கையின் அனுபவங்கள் ஊடாக பலவற்றை படிக்கத் தொடங்கி விட்டதால் சில வேளைகளில் நான் வந்தாலும் உங்களை பயன்படுத்துவார்களோ தெரியாது. எதற்கும் யோசியாமல் போய் வாருங்கோ'' என புன்முறுவலுடன் புத்தகங்களை வழி அனுப்பி வைத்தது. புத்தகங்கள் தலையைக் குனிந்தபடி தமது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை ஆராய வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கின.

S.M.J. தர்மராஜ்
மிருசுவில்.

## திருமறை அறி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்த ஒரு கிறிஸ்தவன் இறக்கும் போது, கிறிஸ்துவின் வாக்குறுதி நிறைவேற்றப்படும்; ''என் தந்தையின் விருப்பம் இதுவே; மகனைக் கண்டு, அவரில் விசுவாசம் கொள்பவன் எவனும் முடிவில்லா வாழ்வு பெறவேண்டும்; நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன்... விசுவசிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான்'' (அரு 6:40). உடலினது மரணம் வாழ்வின் இயல்நிலையை மட்டுமே மாற்றுகின்றது. கிறிஸ்துவுடனுள்ள ஐக்கியம் மரணத்தோடு முற்றுப்பெறுவதில்லை. மாறாக, இவ்வுலகின் நிலையற்ற பொருள்களிலிருந்து மனிதன் இறைவாழ்வின் நித்திய, ஆன்மீக அரசில் பிரவேசிக்கும்போது அது தனது முழு மகிமையில் தோன்றும்.

2. ''இன்பவனம்'' அல்லது ''மோட்சம்'' என்னும் சொல் இவ்வுலகை நீத்தவர் இறைவனோடு கொண்டிருக்கும் வாழ்வைக் குறிக்கும். இறைவனோடுள்ள இந்த வாழ்வு எத்தகையது என்பது பற்றித் திட்டவட்டமான ஒருகருத்து மனிதனுக்கு இருக்கமுடியாது. ஏனெனில், நித்தியம் என்றால் என்ன என்பது பற்றி அவனுக்குத் தெளிவான ஓர் எண்ணம் இல்லாதது மாத்திரமல்ல, ஒப்புமையின் மூலம் இறைவன் எத்தகையவர் என்பதுபற்றி ஒரு தெளிவற்ற கருத்தும், இவ்வுலக வாழ்வின் பின் தான் எப்படியிருப்பான் என்பதுபற்றி முற்றும் எதிர்மறையான கருத்துமே கொண்டிருக்கிறான். ஆகவே, அமைதியும் ஆனந்தமும் நிறைந்த வாழ்வையும், முழுமையான இறைபிரசன்னத்தையும், புனிதர்களின் ஐக்கியத்தையும் பற்றி திருவெளிப்பாடு கூறுவதை கிறிஸ்தவன் பற்றிக்கொள்ளுகின்றான். புனித சின்னப்பர் எழுதியுள்ள படி ''ஆண்டவரோடு எப்போதும் இருப்போம். எனவே இக்கருத்துக்களைக் கொண்டு ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்ளுங்கள்.''

(1 தெசலோ. 4: 17–18)

(வளரும்)

## வாசகர் கருத்து

அகதி முகாம்
மானிப்பாய்

பாதுகாவலன் பல கிறிஸ்தவ விடயங்களை பல நெருக்கடிகளுடன் தருவது அதனைப் படிக்கும் எமக்கு மகிழ்வைத் தருகின்றது. எமது பத்திரிகை என்ற எண்ணத்துடன் அதன் வளர்ச்சி பற்றியும் தங்களுடன் எமது ஆவலைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

''ஊருக்கு உபதேசம் உனக்கல்ல'' என்பது போல் காலத்தைச் சொல்லி காலத்தைக் கடத்தாது காலத்தின் தேவை கருதி பணிகளையும் விரைவு படுத்தவேண்டும்,

புதுப்பித்தல் மூலம் யாழ். மறைவட்டத்தை வளர்த்தெடுக்கும் தொடர்பு சாதனம் பாதுகாவலன் பத்திரிகை ஒன்றே. அது கூட வாரம் ஒரு முறை வெளிவர என்ன தடை? சுற்று மடல்களும், தொடர் கட்டுரைகளும் வரும் போது புதிய சிந்தனை படைப்புக்கள், இலக்கிய வடிவங்கள் (கதை, கவிதை, துணுக்குகள் வாசகர் கடிதம்) வர முயற்சிக்க வேண்டும்.

பங்குகள் எங்கும் ஞாயிறு தினம் வாங்கக்கூடிய விற்பனைகளும் (பரவலாக்கம்) தேவை.

பங்குகளின், செயற்பாடுகளும் பாதுகாவலனுடன் வாசகர் தொடர்பு கொள்ளும் கேள்வி – பதில், செவ்விகள் தொடர்ந்து வரவேண்டும்.

மாணவர் மட்டத்திற்கு சில படைப்புகள் இலகுபடுத்தி சிறுவர் மனம்கவர வெளிவர வேண்டும்.

இவை மூலம் படைப்பாளிகள் உருவாகுவதுடன் வாசக இதயங்கள் நற்பயன்களைப் பெறும்.

இவைகள் பாதுகாவலன் மட்டில் செயல் வடிவம் பெறுவதும், புதுப்பித்தலில் ஒரு வடிவமாக அமையும், இல்லையேல் அரச மட்டத்து தமிழ் மொழி சட்டமூலம் போல் எழுத்துருவில் மட்டும் தீர்மானம் எடுப்பதில் பயன் இல்லை என்பதே எமகருத்து. பணி சிறக்க! பணிகள் தொடர்க!!

கமலி நிரோ வினோஜா

* ★ *

கடந்த 15 மாதங்களில் கிடைதத இரண்டாவது ''வாசகர் கருத்து'' உங்களதே. நன்றி. இரண்டும் பிரசுரிககப்பட்டன. (ஆ ர்)

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA

## அனுமதி விண்ணப்பம் — 1994

பின்வரும் வகுப்புகளுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு :– 01-02–1988 — 31-01–1989 க்குள் பிறந்திருக்க வேண்டும்.

நான்காம் ஆண்டு :– 1985 இல் பிறந்திருக்க வேண்டும்.

ஆறாம் ஆண்டு :– 1983 இல் பிறந்திருக்க வேண்டும்.

ஒன்பதாம் ஆண்டு :– 1980 இல் பிறந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பப்பத்திரம் ரூபா 100-00 ( பரீட்சைக் கட்டணம் உட்பட ) 01-10-93 தொடக்கம் 22-10-93 வரை பாடசாலை நேரங்களில் (காலை 9-00 — 1-00) கல்லூரிக் காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 26-10 1993 ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9-00—12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதிப் பரீட்சைத்தினம் 06-11-1993 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமுகம் தரவேண்டிய நேரம் ( காலை) | பரீட்சை ஆரம்பம் ( காலை ) |
|---|---|---|
| 9 | 8-00 | 8-30 |
| 6 | 8-00 | 8-30 |
| 4 | 8-00 | 8-30 |
| 1 ( இல: 01- 100 ) | 8-00 | 8-30 |
| 1 ( இல: 101–250 ) | 10-30 | 11-00 |

★ 6 ஆம், 9 ஆம் வகுப்புகளுக்கு நடாத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ் ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

A/32/93

கல்லூரி அதிபர்

## காவலன் கண்மணிகள்

ஒளி: 7
சுடர்: 20

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**



## அம்மா

9. போர்க்காலம் :

(5) ''யேசுவே எங்களைக் காப்பாற்றும்''

கண்மணிகள் மூவரும் ஒக்டோபர் 13ஐ ஆவலுடன் காத்திருந்த பொழுது, அவர்களுக்குப் பயமுறுத்தல்கள் பல பக்கத்தாலும் வந்தன. ''அற்புதம் எதுவும் நடக்காவிட்டால் உயிரோடு கொழுத்துவோம்,'' என்றாள் ஒரு தாய். அதற்கு அம் மூவரும் ''நாங்கள் அஞ்சமாட்டோம்'', என்றனர்.

ஒக்டோபர் 12 கோவை நோக்கி மக்கள் படையெடுத்தனர். நெடுந்தூரத்திலிருந்தும் மழையையும், பொருட்படுத்தாமல் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமானோர் காட்சி காணக் கூடிவிட்டனர்.

ஒக்டோபர் 13 அம்மாவின் கண்மணிகள் மக்கள் வெள்ளத்திடையே மகிழ்வுடன் அம்மாவைக் காணச் சென்றனர். அவ்வேளை லூசியாவின் தலையில் அழகிய ரோஜா மலர் சூட்டி ஒரு பெண் மகிழ்ச்சி கொண்டாள்.

**நண்பகல்**

லூசியா குரல் எடுத்து, மகிழ்ச்சி பொங்க ''அதோ, அன்னை! அதோ அம்மா!'' எனக் கூவினாள். அங்கிருந்த அனைவரின் வாய்களும் மூடின. கண்கள் அம்மாவைக்காண விரிந்தன, விழிகள் பல திசைகளிலும் சுழன்றன.

பேரழகுடன் நின்ற அம்மாவைப் பார்த்து, ''அம்மா நீங்கள் யார்? என்னிடமிருந்து என்ன விரும்புகிறீர்கள்'' என்று ஆவல் பொங்க லூசியா கேட்டாள்.

**''நான்தான் செபமாலை மாதா!**

இங்கே என் மகிமைக்காக ஒரு கோயில் கட்டவேண்டும். மக்கள் செபமாலை சொல்லவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பைக் கேட்க வேண்டும். நம் ஆண்டவரை இன்னும் துன்புறுத்தக் கூடாது. ஏனெனில் ஏற்கனவே அவர் அதிகம் துன்புறுத்தப்பட்டுள்ளார்,'' என்று கூறிக்கொண்டே தன் கரங்களை நீட்டினாள். அங்கே குழந்தை யேசு புனித சூசையப்பருடன் கண்மணிகளுக்குக் காட்சி கொடுத்தார். அதேவேளை...

மழை நின்றது. கதிரவன் வட்டத்தட்டாக ஒளி சிந்தி காட்சியளித்தான். கதிரவன் நெருப்புச் சக்கரமாக சுழலத் தொடங்கினான். சுழலும் தட்டு மண்ணை நோக்கி விரைந்து வந்தவேளை ''யேசுவே எங்களைக் காப்பாற்றும், எங்கள் மேல் இரக்கமாயிரும்.'' என்று மக்கள் கூவினர், ''எங்கள் பாவங்களை மன்னியும் இறைவா'' என்று கதறினர். ஆண்டவனை நம்பினர். ஆதவனின் அற்புதக் காட்சி 10 நிமிடங்கள் நீடித்தன. ஆதவன் தன்னிலை அடைந்து பேரொளி பரப்பினான்.

அன்புக் கண்மணிகாள்! அம்மாவின் அற்புதக் காட்சியால் கலங்கிய மக்கள் கூவியதுபோல் பயத்தால் கூவாமல் அன்னை வழியில் இறை இயேசுவில் விசுவாசம் கொண்டு ''யேசுவே எங்களைக் காப்பாற்றும்'' எனத் தினமும் வேண்டுவோம், வெற்றி பெறுவோம்.

உங்கள் அன்பின், அன்புசிறி

## ஆசிரியர் தினம் 1993

யாழ் மறைவட்டக் கத்தோலிக்க ஆசிரியசங்கம் மேற்படி தினத்தைச் சிறப்பிக்கும் முகமாகக் கத்தோலிக்க ஆசிரியர் தின விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

இடம் : யாழ். மறைக்கல்வி நிலையம்

காலம் : 09-10-1993 சனிக்கிழமை
காலை 9-30 மணி

அனைத்துக் கத்தோலிக்க ஆசிரியர்களையும் பங்குகொண்டு பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

ம. யேசுதாசன் (செயலர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "புதுப்புனல்" நிகழ்வுகள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

### ஆசனக் கோயில்

- புதுப்புனல் வாயிலாக விசுவாசத் தெளிவு ஒன்று ஏற்பட்டுள்ளது. மற்றது இது ஒரு மீளாய்வு என்றும் சொல்லலாம். ஏற்கனவே தெரிந்த விடயங்கள் மறக்கப்பட்ட நிலையில் மீண்டும் ஒருகால் தரப்பட்டுள்ளது. (ஒரு பெரியார்)
- எமது நாட்டில் நடைபெறும் பிரச்சனைகள் தொடர்பான ஓர் உறுதியானதும், தெளிவானதுமான நிலைப்பாடு உண்டாகும் என எதிர்பார்க்கிறேன். (இளைஞன்)

### ஆரோக்கிய நாதர் ஆலயம்

- நாங்கள் இதில் உணர்வோடு பங்கெடுத்து, மற்றவர்களும் இது பற்றி, அறிய நாங்கள் உதவ வேண்டும். (முதியவர்)
- இதில் வடிவாய் பங்கெடுத்தால், அவசரப்பட்டும், அறியாமையாலும் வேறு சபைகளில் சேர்தலை, புத்தகத்தை காவிக்கொண்டு திரிபவர்களை எங்களால் தடைசெய்ய முடியும். (யுவதி)

### குருநகர்

- புதுப்பித்தல் எங்களில் இடம்பெறவேண்டும். இதற்காகத்தானே நாங்கள் எங்களின் வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு வந்துள்ளோம். — ( தாய் )
- இவ் எழுச்சிமிக்க மகாநாடு, சற்று தாமதமாக ஏற்பட்டாலும், 2ஆம் வத்திக்கான் சங்கத்தைப்போல் புத்துயிர் பெறும் என்பது திண்ணம். — ( இளையவர் )

### புனித அடைக்கல மாதா

- எம்மில் நாம் நிட்சயம் மாற்றங்களைக் கொணர்வோம். குருக்கள், துறவிகள் மாறாவிடில் மாற்றுவோம். — ( இளைஞர் )
- இன்றைய காலத்திற்கு ஏற்ப, நற்செய்தியை தரும் சபையாக, திருச்சபை மாறுதல் அவசியம். — ( மாணவி )

### சுண்டிக்குளி

- இப்பொழுதுதான், பொதுநிலையினராகிய நாங்கள், திருச்சபையிலே எவ்வளவு பெரிய பங்கு வகிக்கின்றோம் என்பதை புரிந்து கொள்கிறோம். — ( தாய் )
- இவ்வாறான முயற்சிகள் ஏற்கனவே தரப்பட்டிருக்க வேண்டும். — (தந்தை)

### பாண்டியன் தாழ்வு

- திருச்சபையின் நன்மைக்காக அதன் தவறுகளை நேர்மையான வழியில் தட்டிக் கேட்க, துணிவு பிறந்துள்ளது. — (பெரியார்)
- இளைஞர் யுவதிகளாகிய எமது திருச்சபைப் பங்களிப்பைப் பற்றி விளக்கி கூறப்பட்டபோது, எமது உண்மை நிலையை எண்ணி வெட்கமடைந்தோம். — (இளைஞர்)

### பாஷையூர்

- காலத்தின் தேவைக்கு ஏற்ப, தன்னை வளர்த்துக் கொள்வதற்காக, பொதுநிலையினரின் கருத்துக்களையும் வரவேற்று திருச்சபை தன்னை வளர்த்துக்கொள்ள எடுத்துக் கொண்ட இம் முயற்சி, வரவேற்கத்தக்கதொன்று. — (முதியவர்)
- யாழ். திருச்சபையானது, எதிர்காலத்தில், ஒரு வளர்ச்சிப் பாதையில் செல்லும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு. — (இளைஞர்கள், யுவதிகள்)

### அரியாலை

- கருத்துரைகள் எங்களின் மனதைத் தொட்டன. அவை எங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் சிந்திக்க கூடியதாக இருந்தது. கிறிஸ்தவ விழுமியங்களை வாழத் தூண்டியது. — (இளைஞர்)
- பல்வேறு சிரமங்கள், கஷ்டங்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை எங்கள் மனக்கண் முன் கொண்டுவந்தது. — (பெரியோர்)

### கோப்பாய்

- இது முன்பு எப்போதாவது நடக்க வேண்டும் என்று எதிர் பார்த்தோம். இப்போது நடப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இதில் இருந்து நிறைய பலன் வரும். — (பெற்றோர்)
- எங்களின் உரிமைகளையும் கடமைகளையும் உணரக்கூடியதாக இருந்தது. எம்மை ஒரு முன்னேற்ற பாதையில் இட்டுச் செல்லும் என்பது உறுதி. — (இளைஞர்)

### நல்லூர்

- எல்லா வகையிலும், எமது திருச்சபை மாற்றப்பட வேண்டும். — (தந்தை)
- அடிப்படையில், நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வில் மாற வேண்டும். வெளிமாற்றம் மட்டும் போதாது, உளமாற்றமும் வேண்டும். — (யுவதி)

# கலப்புத் திருமணத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும்

மக்கள் நாடு விட்டு நாடு குடியேறுவதால் கத்தோலிக்கருக்கும் பிறமதத்தினருக்குமிடையிலான திருமணங்கள் அதிகரித்து வருவதையிட்டு சிறப்பு மேய்ப்புப் பணிக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அழைப்பு விடுத்தார் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர்.

உலக குடியேற்ற நாளுக்கான செய்தியை கடந்த வியாழன் (30–9–93) அன்று வெளியிட்ட செய்தியில் குடும்பம் தொடர்புடையவர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். வெவ்வேறு மதங்களுக்கிடையிலான திருமணங்களின் அனுபவத்தை திருச்சபை மேய்ப்பர்கள் மதிக்கும் அதே வேளை கத்தோலிக்கராய் இருக்கும் கணவன் அல்லது மனைவியும் மற்றும் அவர்களது குழந்தைகளின் விசுவாசத்திற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென விண்ணப்பித்துள்ளார் திருத்தந்தை. இருவேறு மதங்களிலிருந்து திருமணம் புரியும் தம்பதிகள் தங்கள் மதங்களை எது பிரிக்கின்றது, எது இணைக்கின்றது என்பது குறித்து தெளிவான புரிந்துணர்வு இருப்பது அவசியம் எனவும் திருத்தந்தை தனது செய்தியில் கூறியுள்ளார்.

## அன்னை திரேசா வழங்கும் நிரந்தர இல்லம்

இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அநாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிரந்தர தங்குமிடங்களை வழங்கி அவர்களுக்கு வாழ்வளிக்க தயாராக உள்ளதாக அன்னை திரேசா அறிவித்தார். ஏற்கனவே பம்பாய் மற்றும் பூனாவிலுள்ள அவரது பிறரன்புச்சபைக் கன்னியர்கள் மீட்புப்பணியில் ஈடுபட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார் அன்னை திரேசா.

## இயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் நம்பகரமானவை - பயனுள்ளவை

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு முயற்சியில், திருச்சபை ஊக்கமளிக்கும் இயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் மிகப் பயனுள்ளவை என்று ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளதாக அறிவிக்கின்றனர் பிரிட்டனின் மருத்துவர்கள், திருச்சபை ஊக்கமளிக்கும் இயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் நம்பகரமானவை, ஏற்கக்கூடியவை, பயனுள்ளவை என்பதை இங்கிலாந்து, இந்தியா, அயர்லாந்து பிலிப்பீன்ஸ் மற்றும் மத்திய அமெரிக்காவின் 869 பெண்களிடம் நடாத்திய ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பிரித்தானிய மருத்துவரின் கட்டுரை கூறுகின்றது.

## குருத்துவ நினைவு தினம்

"செபிப்போமாக"

நவம்பர்

| | | |
|---|---|---|
| 20. | பீற்றர் துரைரட்ணம் | 1971 |
| | A. F. X. ஜெயசேகரம் | 1971 |

## புதிய அப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் திருச்சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்ற பெயருக்கு விசுவாசமாயிருக்க முடியாது என்ற அவர், நற்செய்தியின் மாறுபடா செய்தியை சிறந்த முறையில் கிரகித்து ஏற்றுக்கொள்ள இப்புதிய சுற்றுமடல் பங்காற்றும் என்றார்.

கடந்த நவம்பரில் வெளியிடப்பட்ட சர்வதேச மறைக்கல்வி ஏடு கிறிஸ்தவ ஒழுக்கப் பண்புகளை முழுமையான முறைப்படுத்தப்பட்ட விரித்துரைகளை கொண்டிருக்கும் அதேவேளை, 'வெறித்தாத்திஸ் ஸ்பிளென்டோர்' எனும் சுற்றுமடல் கிறிஸ்துவ ஒழுக்கப் பண்புகளின் பின்னணி மற்றும் நோக்கங்களை ஆய்வு செய்வதாக இருக்கிறதெனக் கூறினார் திருத்தந்தை.

## 10ஆவது சுற்றுமடல்

183 பக்கங்கள் கொண்ட திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பரின் பத்தாவது சுற்றுமடலாகிய "உண்மையின் மாண்பை" ஆயத்தம் செய்ய 6 வருடங்கள் எடுத்தன. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்த ஏடு, இதன் முதற் பகுயில் விவிலிய எடுத்துக்காட்டுடன் கிறிஸ்தவ ஒழுக்க நெறிக் கொள்கைகளின் மாற்ற நிலைகளைப் பார்க்கிறது. இரண்டாம் பகுதி இன்றைய ஒழுக்க நெறி இறையியலின் சில கோட்பாடுகளை விவாதிக்கும் வேளை, அதன் மூன்றாம் பகுதி மேய்ப்புப் பணி அக்கறையுடன் கத்தோலிக்க படிப்பினைகள் எங்கனம் திருச்சபை மற்றும் உலகின் வாழ்வுக்கு அவசியமாய் இருக்கிறதென்பதை எடுத்தியம்புகிறது.

## பாடநூலைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பாடநூல் குடும்ப வாழ்வு, கிறிஸ்தவ மதிப்பீடுகள் என்ற முக்கியமான கருத்துக்களை விவாதிக்கவில்லையெனவும் குற்றம் சாட்டியுள்ளதுசிம்பாவே தலத்திருச்சபை. இந்நூலைக் குறித்து தலத் திருச்சபையையோ பொது மக்களையோ கலந்தாலோசிக்கவில்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளது தலத்திருச்சபை.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு - 1

அடைக்கலம்: எங்க அண்ணே பதுங்கி கிடந்திட்டு வாறியள் ?

குருசுமுத்தண்ணை: தூங்கிக் கிடந்தியள், அதுதான் தூரப் போயிட்டு வாறன் தம்பி.

அடை: இப்ப ஏதோ விழிப்பா இருக்கெண்டே சொல்லுறியள் அண்ணே.

குரு. தூங்கிறவனை எழுப்பலாம், ஆனா தூங்கிறது போல கிடக்கிறவனை எழுப்ப ஏலாதுதான். இதில தூங்கிறவன் விழிச்சிட்டா, கிடக்கிறவனும் எழும்பி விடுவான் அதுதான்.

அடை: அப்ப விழிப்புணர்ச்சியைத் தூண்டத்தான் வாறியளோ?

குரு. எதுவும் புரிஞ்சிட்டாப் புதுவாழ்வுதான் தம்பி.

## முதல் வருட நினைவு



திருமதி புவக்கீன்பிள்ளை
( தம்பிமுத்து ) ஆனாசி
சில்லாலை,

தோற்றம் 1906-04-13 மறைவு 1992-10-15

இறைவா! இவரை உமது புனிதர்களின் தோழமையில் ஏற்றருளும்.

15–10–93 வெள்ளிக்கிழமை காலை 6.15 க்கு யாழ். பேராலயத்தில் இவரது ஆன்ம சாந்தித் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு தயவாய் வேண்டும்.

மகன், மருமகன், உறவினர்.

A/34/93

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமைபாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல. B/Q.1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org